**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.1/2023**
**Prosecution Witness**:8

| Name | Thiru.Sriraman (P.W.8) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26th day of February 2026** by S.Ponraj, Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1) நான் தற்போது சேலம் க்யூ பிராஞ்ச் பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.12.2021ம் தேதி நான் கொடுமுடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்தபோது நிலைய தலைமை காவலர் 1844 ரவி என்பவர் புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த கொடுமுடி காவல் நிலைய குற்ற எண்.365/2021, சட்டப் பிரிவுகள் 279, 337 இ.த.ச. வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

2) 11.12.2021ம் தேதி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இரவு 19.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான கொடுமுடி – கரூர் ரோடு வெங்கமேடு, பெட்ரோல் பங்க் அருகில் சென்று சாட்சிகள் ராஜா, வீரமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் பார்வதி, கார்த்திக், நெடுமாறன், கவின்குமார் மற்றும் செந்தில் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

3) 17.12.2021ம் தேதி விபத்தை ஏற்படுத்திய எதிரியின் வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். பின்பு மேல்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.26 09:04:40 +0530

விசாரணைக்காக காவல் ஆய்வாளர் முருகன் அவர்களிடம் வழக்குக் கோப்பை ஒப்புவித்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பு) :–**

1) காவல் நிலையத்தில் பொது நாட்குறிப்பு பராமரித்து வருகிறோம் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பில் பதிவு செய்த பின்னர்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வோம் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பு எண், நேரம் ஆகியவற்றை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. குற்றவியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 154ன் படி முழுமையாக நிரப்பப்படாத முதல் தகவல் அறிக்கை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை முழுமையாக நிரப்பப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது உத்தரவின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் முதல் வரியில் 11.11.2021 என உள்ளது என்றால் சரிதான். தட்டச்சு செய்யும்போது தவறாக குறிப்பிடப்பட்டுவிட்டது. நான் சொல்வதுபோல் உண்மையாகவே தட்டச்சு பிழையாக இருந்தால் உயர்அதிகாரியின் அனுமதியுடன் அதற்கான அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

2) முதல் தகவல் அறிக்கையில் 2வது பக்கத்தில் மெயின்ரோட்டுக்குள் வந்து விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று உள்ளது என்றால் சரிதான். தார்சாலையில் இருபுறத்திலும் மண்தடம் உள்ளது என்றால் சரிதான். மாதிரிவரைபடத்தில் விபத்து நடந்ததாக குறியிடப்பட்டிருக்கும் பகுதி மண் சாலை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் தவறு என்றால் சரியல்ல. 11.12.2021ம் தேதியன்று மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி மாதிரி வரைபடத்தில் சட்டப் பிரிவுகள் 279, 337 @ 279, 304(A) என உள்ளது என்றால் சரிதான். பிரேத விசாரணைக்கு காவல் ஆய்வாளர் அனுப்பி வைத்தார். விபத்தில் இறந்தற்கு பின்னிட்டுதான் 304(A) இ.த.ச.வாக வரும் என்றால் சரிதான்.

3) விபத்து நடந்த இடத்திற்கு அருகில் உள்ள பெட்ரோல் பங்கில் சி.சி.டி.வி கேமரா பொருத்தப்பட்டிருந்ததா என்றால் ஞாபகமில்லை. மேற்படி பெட்ரோல் பங்கில்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.26 09:04:43 +0530

சி.சி.டி.வி கேமரா பொருத்தப்பட்டிருந்தது என்றாலும், நான் சம்பவ இடத்திற்கு நேரில் செல்லாததால்தான் அதை பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஆஜர் எதிரியால் சம்பவம் எதுவும் நடைபெறவில்லைல என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தவறாக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. காயம்பட்டவருக்கு ஆதரவாக பொய்யாக ஜோடிக்கப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.26 09:04:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.